தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 230/ந/2022
நாள். 18.01.2023

திருமதி. I.குழந்தையம்மாள்,
பரமக்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
பரமக்குடி நகராட்சி. – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, S.S.கோவில் தெரு, 11/225 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2022 அன்று பெறப்பட்டு 230/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, S.S.கோவில் தெரு, 11/225, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“பரமக்குடி நகராட்சியில் காண்ட்ராக்டராக பதிவு செய்து ஒப்பந்த பணிகள் செய்து வருகின்றோம். பரமக்குடி நகராட்சியில் கடந்த மார்ச் 2022–ல் உள்ளாட்சி நிர்வாகம் பொறுப்பேற்றதற்கு பின் நடைபெறும் டெண்டர்கள் குறித்த அறிவிப்பு வெளியிடப்படுவதில்லை. அதிலும் குறிப்பாக தற்போதைய ஆணையாளர் பொறுப்பேற்றதில் இருந்தே இரகசியமாக டெண்டர்களை நடத்தி வருகிறார். அதிலும் குறிப்பாக நகராட்சி பொது வருவாய் நிதியின் கீழ் நடைபெறுகின்ற ரூ.10/– இலட்சம் மதிப்பீட்டுக்கு குறைவான மதிப்பிலான பணிகளுக்குரிய டெண்டரை நகர்மன்றத் தலைவரோடு கூட்டணி அமைத்துக் கொண்டு நகர்மன்றத் தலைவரும், ஆணையாளரும் தங்களது பேரத்திற்கு படியும் சில காண்ட்ராக்டர்களை வைத்துக் கொண்டு சிண்டிகேட் அமைத்து ரகசியமாக டெண்டர் நடத்துகிறார்கள். இதனால் டெண்டர் குறித்த அறிவிப்பு எங்களுக்கு தெரியாததால் எங்களால் அந்த டெண்டரில் கலந்து கொள்ளவிடாமல் தடுக்கப்படுகிறது. டெண்டரை முறையாக அறிவிப்பு வெளியிட்டு நடத்தினால் எங்களைப் போன்ற பலரும் டெண்டரில் கலந்து கொள்கின்ற வாய்ப்பு கிடைக்கும், அதனால்வரும் ஷெட்யூல் கட்டணத்தால் நகராட்சிக்கும் பல ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும் அதை வேண்டுமென்றே தடுத்து நகராட்சிக்கு இழப்பை ஏற்படுத்துகிறார்கள்.

இது சம்பந்தமாக பரமக்குடி நகராட்சியில் நடைபெறும் டெண்டர் குறித்த அறிவிப்பை எங்களது நிறுவனத்திற்கு தபால் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என, கடந்த 02.06.2022, 03.06.2022 மற்றும் 19.07.2022 ஆகிய தேதிகளில் நகராட்சிக்கு தபால் மூலம் தெரிவித்திருந்தும் எங்களுக்கு எந்த டெண்டரையும் தெரியப்படுத்தவில்லை. தற்சமயம் 04.10.2022 தேதியிட்ட நகர்மன்ற கூட்ட தீர்மான நகலில் நகராட்சி பொது வருவாய் நிதியின் கீழ் பல்வேறு தேதிகளில் டெண்டர் நடைபெற்றதை குறிப்பிட்டு அந்த பணிகளுக்கான ஒப்புதலுக்கு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

அதில் குறிப்பாக பொருள் 21 மற்றும் 100ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு நகராட்சி பொது வருவாய் நிதியின் கீழ் தலா ரூ.6.50 மற்றும் ரூ.8.50 லட்சம் மதிப்பிலான பணிகளுக்கு 08.07.2022–ல் டெண்டர் நடைபெற்றதாகவும், திரு.செல்வம் என்ற ஒப்பந்ததாரர் பணியை எடுத்துள்ளதாக கோரி நகர்மன்ற ஒப்புதலுக்கு 19.10.2022–ல் 3 மாதம் கழித்து தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இந்த டெண்டர் குறித்த அறிவிப்பு எங்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக டெண்டர் பற்றிய அறிவிப்பு நோட்டீசில் தங்களுக்கு வேண்டிய சில காண்ட்ராக்டர்களிடம் கையெழுத்துப் பெற்று டெண்டர் நோட்டீஸ் வழங்கப்பட்டதாக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது.

அதே போல் 19.10.2022 நகர்மன்ற தீர்மான நகலில் நகராட்சி பொதுவருவாய் நிதியின் கீழ் 12.10.2022 தேதியில் 22 பணிகளுக்கு சுமார் மொத்தம் ரூ 1 கோடியே 20 இலட்சம் மதிப்பிலான பணிகளுக்கு டெண்டர் மதிப்புகளில் டெண்டர் நடந்ததாக குறிப்பிட்டு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு நடைபெற்ற டெண்டர் குறித்த அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிடப்படவில்லை; நகராட்சி அறிவிப்பு பலகையிலும் ஒட்டப்படவில்லை. ஆணையாளரும், நகர்மன்றத் தலைவரும் கூட்டணி அமைத்து தங்களுக்கு வேண்டிய பினாமி காண்ட்ராக்டர்களுக்கு மட்டும் டெண்டர் குறித்த அறிவிப்பு வழங்கியதாக ஆவணங்கள் தயார் செய்து டெண்டர் நடத்தப்பட்டுள்ளது. வருடத்திற்கு சுமார் 6 கோடி ரூபாய் பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்த பணிகள் செய்யும் எங்களது IVR & Co நிறுவனம் மேற்கண்ட டெண்டரில் கலந்து கொள்ளவிடாமல் தடுக்கும் பொருட்டு எங்களுக்கு டெண்டர் குறித்து அறிவிப்பை வழங்காமல் மறைத்து டெண்டர் நடத்தப்பட்டுள்ளது. அதிலும் தங்களுக்கு வேண்டிய எட்டு காண்ட்ராக்டர்களுக்கு மட்டும் சிண்டிகேட் அமைத்து தொடர்ந்து வேலை வழங்கி மற்றவர்களை கலந்து கொள்ளவிடாமல் தடுத்து அதன் மூலம் மேற்கண்ட 22 பணிகளுக்கும், நகராட்சிகள் ஷெட்யூல் கட்டணம் மூலம் வருமானமாக கிடைக்க வேண்டிய சுமார் 50,000/– ரூபாய் வருமான இழப்பு நகராட்சிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பரமக்குடி நகராட்சியில் இணையதளத்தின் மூலம் நடைபெறும் ரூ.10/– இலட்சத்துக்கும் அதிகம் மதிப்புள்ள பணிகளுக்கான டெண்டர் அறிவிப்பை மட்டுமே நாளிதழில் வெளியிடுகிறது. ரூ.10/– இலட்சத்திற்கும் குறைவான மதிப்புடைய பணிகளுக்கான டெண்டர்கள் ரகசியமாகவே நடத்தப்படுகிறது.

நகராட்சியில் நிதிநிலைமை சரியில்லாத சூழ்நிலையிலும் தனிப்பட்ட ஆதாயத்திற்காக 12.10.2022 அன்று பொது வருவாய் நிதியின் கீழ் 22 பணிகளுக்கு டெண்டர் நடத்தி நகராட்சிக்கு மேலும் இழப்பை ஏற்படுத்தி உள்ளனர்.

எனவே, டெண்டர் குறித்த அறிவிப்பை வெளியிடாமல் 08.07.2022, 12.10.2022 ஆகிய தேதிகளில் இரகசியமாக நடத்திய 19.10.2022 நகர்மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள பொருள் 21, 100, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 88, 89, 91, 92, 93, 95, 96, 97, 98, 102 ஆகிய

பணிகளுக்கான ரகசிய டெண்டரை ரத்து செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் பரமக்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

பரமக்குடி நகராட்சி ஆணையாளர் தனது 04.01.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''பரமக்குடி நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் முறையாக ஒப்பந்தவிதிகளின்படி மேற்கொள்ளப்படுகிறது. 08.07.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டு நடைபெற்றது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் அலுவலக பதிவேட்டில் கையொப்பம் போட்டுள்ளார்கள். மேலும் 12.10.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் உரிய வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. மேற்படி ஒப்பந்ததாரர் 2020–21 ஆம் வருடம் இந்நகராட்சியில் பொதுநிதியின் கீழ் செய்து முடித்த சுமார் ரூ 40.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கே உரிய பட்டியல் தொகை கிடைக்கவில்லை என்ற காரணத்தால் மேலே குறிப்பிட்ட எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொள்ளவில்லை.

நகராட்சியில் வேலை செய்து முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, தொழிலாளர் நல நிதி ஆகியவை உரிய கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது. மேலும் டெபாசிட் தொகை உரிய கால கட்டத்தில் விடுவிக்கப்பட்டு வருகின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் மூலம் அந்தந்த வார்டு பொதுமக்களின் அவசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேவையான பணிகளை மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைத்து தீர்மானம் இயற்றப்படுகிறது.

அதன் அடிப்படையில்தான் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதுதான் நடைமுறை வழக்கத்தில் உள்ளது. இதில் எவ்வித குளறுபடியும் இல்லை. ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய செடியூல் கட்டணம் முறையாக வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இதில் எவ்வித நிதியிழப்பும் இல்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையரும் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகுமாறு 21.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் உடல் நலக்குறைவின் காரணமாக கலந்து கொள்ள இயலாததால் அவரது ஒப்புதலின்படி, அவர் சார்பாக அவரது மகன் திரு.I.வின்செண்ட் ராஜா என்பவர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''பரமக்குடி நகராட்சியில் நடைபெறும் டெண்டர்கள் குறித்த அறிவிப்பு முறையாக வெளியிடப்படுவதில்லை. நகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.10 இலட்சத்திற்கும் மேல் உள்ள பணிகளுக்கு மட்டுமே இணையதளத்தின் மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகின்றன. ரூ.10 இலட்சம் மதிப்பீட்டுக்கு குறைவான டெண்டர்கள் இரகசியமாக நடத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து பலமுறை புகார்கள் அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இரகசியமாக நடத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தாயாரின் 19.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான பரமக்குடி நகராட்சி ஆணையர் சார்பாக பரமக்குடி நகராட்சியில் இளநிலைப் பொறியாளராக பணிபுரியும் திரு. A.P.சுரேஷ்பாபு மற்றும் கணக்கராகப் பணிபுரியும் திருமதி. K.ஜெயசுதா ஆகியோர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:-

''பரமக்குடி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளுக்கு முறையாக அறிவிப்புப் பலகையின் மூலம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்வதிலும், ஒப்பந்தப் புள்ளிகளை கோருவதிலும் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கொள்வது தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக பரமக்குடி ஆணையரின் 4.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் சார்பாக ஆஜரான அவரது மகனுடைய வாக்குமூலம், பரமக்குடி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, பரமக்குடி நகராட்சியின் இளநிலைப் பொறியாளர் மற்றும் நகராட்சியின் கணக்கர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பரமக்குடியை சார்ந்த மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் தனது நாளிடப்படாத முறையீட்டு மனுவில், பரமக்குடி நகராட்சியில் ரூ.10/- இலட்சம் மதிப்பீட்டிற்கு குறைவான பணிகளுக்கு இரகசியமாக ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்படுவதாகவும், குறிப்பாக 08.07.2022 மற்றும் 12.10.2022 ஆகிய தேதிகளில் 20 பணிகளுக்கு இரகசியமாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 19.10.2022 அன்று நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளை இரத்து செய்திட ஆவனச் செய்யுமாறு கோரியுள்ளார்.

பரமக்குடி நகராட்சியில் இரகசியமாக ஒப்பந்தப்புள்ளி பெற்று, பரமக்குடி நகராட்சி நகர்மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் 20 ஒப்பந்தப்புள்ளிகள் இரத்து செய்யப்படவேண்டும் என மனுதாரர் கோரும் விவரம் வருமாறு:-

| வ. எண் | தீர்மான எண் | ஒப்பந்தம் விவரம் | ஒப்பந்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 21 | தார்சாலை அமைத்தல் | 6.50 | திரு.G.செல்வம் |
| 02 | 78 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.M.சங்கர் |
| 03 | 79 | மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.20 | திரு.K.அருளாந்து |
| 04 | 80 | புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க | 5.30 | திரு.சண்முகம் |
| 05 | 81 | புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க | 5.50 | திரு.G.செல்வம் |
| 06 | 82 | மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.35 | திரு.K.அருளாந்து |
| 07 | 83 | வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.25 | திரு.S.சந்திரன் |
| 08 | 84 | வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.35 | திரு.S.பரிமேலழகர் |
| 09 | 85 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.R.ஆறுமுகம் |
| 10 | 88 | வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.50 | திரு.நாதன் & கோ |
| 11 | 89 | வடிகால் மற்றும் சிறுபாலம் மராமத்து | 5.50 | திரு.M.சங்கர் |
| 12 | 91 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.சண்முகம் |
| 13 | 92 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.M.சங்கர் |
| 14 | 93 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.V.கார்த்திகைச் சாமி |
| 15 | 95 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.S.பாலசுப்பிர மணியன் |
| 16 | 96 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 6.00 | திரு.I.கிருஷ்ண மூர்த்தி |
| 17 | 97 | சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 5.60 | திரு.R.ரெங்கசாமி |
| 18 | 98 | கால்வாயை தூர்வாறுதல் | 9.50 | திரு.R.பரிமேலழகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | 100 | தார்சாலை, வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க | 8.50 | திரு.G.செல்வம் |
| 20 | 102 | புதிய மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்க | 5.30 | திரு.S.நாகராஜன் |

செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்) துறையால் அரசாணை (நிலை) எண்.218 நாள் 29.09.2000–ல் வெளியிடப்பட்ட அரசுகொள்முதல் மற்றும் அரசுப் பணிகளின் ஒப்பந்தப்புள்ளி கோரும் நேர்வுகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர்கள் விவரம் குறித்து ''மாவட்ட ஒப்பந்தப் புள்ளி செய்தி மலரில்'' வெளியிடுவது குறித்த ஆணைகளில் ஒன்றான,

பத்தி 2 (3):–

> ''ரூ 5 இலட்சத்திற்கு மேல் ரூ 25 இலட்சம் வரை மதிப்புள்ள பொருள்கள் கொள்முதல் மற்றும் ரூ 10 இலட்சத்திற்கு மேல் ரூ 25 இலட்சம் வரை பணிகள் தொடர்பானவை மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடப்படும்'' என பிறவற்றுள் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் ஆணையின்படி, மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள 20 பணிகளும் ரூ 10 இலட்சத்திற்கு குறைவாக இருப்பதினால் பரமக்குடி நகராட்சியால் 08.07.2022 மற்றும் 12.10.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, நாளிதழில் மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியிடப்படாமல், பரமக்குடி நகராட்சி அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டதையும், ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் பிரிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி தீர்மானம் ஏற்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

ஆனால், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் அரசாணை (நிலை) எண்.35 நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிமதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் குறித்து பொறியியற் கையேட்டில் (Engineering Manual) வெளியிடப்பட்ட ஆணைகளில், பிறவற்றுள், ஒப்பந்தப்புள்ளி விளம்பரப்படுத்துவது குறித்து வெளியிடப்பட்ட நெறிமுறையில், ''நகராட்சியால் ரூ 5 இலட்சத்திற்கு மேல் ரூ 10 இலட்சம் வரை நகராட்சிப்பணி மேற்கொள்ளக் கோரும் ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நகராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் பதிவு தபால் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்'' என ''2.5 Publicity of Tenders''என்கிற தலைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது.

Engineering Manual for Urban Local Bodies in Tamil Nadu

2.5 PUBLICITY OF TENDERS

Tenders must be invited in the most open and transparent manner possible whether by advertisement in the press or by notice in English and Tamil, pasted in Public places. For an individual work costing upto Rs.10 Lakhs and purchase of materials upto Rs. 5 Lakhs, copy of the notice inviting tender shall be pasted in the notice board of the Municipal Office and also shall be sent by post to the Executive /

Superintending Engineer, PWD / Highways/TWAD, near about Municipal Offices and also to the Project Officer, concerned in the Collector's office with a request to paste them in their notice board. Individual notices to the registered contractors shall be sent under certificate of posting.

மேலும், 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளில், விதி 12–ல் அனைத்து சாத்தியமான ஒப்பந்ததாரர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை அனுப்புதல் குறித்து கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

“ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அதிகார அமைப்பு அவசியமென்று கருதினால், ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை, பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், முந்தைய பொருள் வழங்குநர்கள், ஏதேனும் உள்ளுறைத்திறன் பொருள் வழங்குநர்கள் மற்றும் நன்கு அறியப்பட்ட நிறுவனம் அல்லது நிறுமம் உள்ளிட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

The Tamil Nadu Transparency in Tenders Rules, 2000

Rule 12: **Sending Notice Inviting Tenders to all possible tenderers.**

The Tender Inviting Authority may, if he considers necessary, send the Notice Inviting Tenders to all possible tenderers including registered contractor, past supplier, any potential supplier and any other well-known company or firm directly.

மனுதாரர் புகாராக அளித்துள்ள 20 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நகராட்சியின் அறிவிப்பு பலகையில் மட்டும் விளம்பரப்படுத்தப்பட்டு உள்ளது, ஆனால் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பப்பட்டதற்கான எவ்வித அத்தாட்சியோ, ஆதாரமோ பரமக்குடி நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி பெற்றிருப்பதில் கூட்டு சதி நடந்திருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளில் விதி 12 மற்றும் அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட பொறியியற் கையேடு பத்தி 2.5–ல் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை மீறி, நகராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தபால் மூலம் தெரிவிக்கப்படவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது. இச்செயலானது பரமக்குடி நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் பணியாளர்களின் பொறுப்பற்ற நிர்வாகத் திறமையின்மையையும், உடந்தை மற்றும் உள்நோக்கத்துடன் செயல்பட்ட களங்கத்தையும் காட்டுகிறது. இவ்வாறு ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செயல்பட்ட பரமக்குடி நகராட்சியின் ஆணையர் உட்பட நகராட்சி பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீதும் மற்றும் இதனை சரியான முறையில் கண்காணிக்க தவறிய மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மீதும் உரிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேற்காணும் நடவடிக்கை 3 மாத காலத்திற்குள் எடுக்கப்பட்டு அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

இவ்வாணையின் நகல் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்கும் அனுப்பப்படுகிறது.

Rules of Tender procedure have been blatantly flouted in this case as no intimation had been sent to the petitioner by certificate of posting exposing the favouritism shown to the other tenderers and exclusion of the petitioner. Hence this raises reasonable suspicions about the integrity, neutrality and impartiality of the Paramakudi Municipal Commissioner and officials concerned with the process of awarding works to the successful tender participants excluding the petitioner. Therefore the DMA is directed to initiate definity disciplinary proceedings against the delinquent officials right from the RDMA whose role itself is under the scanner in the matter by his non-involvement, lack of supervision and guidance apart from quiet collusion in the sordid drama.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.I.குழந்தையம்மாள்,
11/225, S.S.கோவில் தெரு,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்,

2) ஆணையாளர், பரமக்குடி நகராட்சி,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,
மதுரை – 625 016.

நகல்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை,
சென்னை – 600 009.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/1/23

செயலாளருக்காக

19/01/23